VAALIPAN MINISTRIES SRI LANKA

# வாலிபன்
# VAALIPAN

வாலிபர்களுக்கான மாதாந்த சஞ்சிகை

இதழ் - 68 | வாலிபர்களுக்கான மாதாந்த சஞ்சிகை | ஆடி - 2013

...விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்;

எபிரேயர் 12:1




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாலிபன்
VAALIPAN
வாலிபர்களுக்கான மாதாந்த சஞ்சிகை

## கிறிஸ்துவுக்குள் அன்பான வாலிபன் வாசகர்களுக்கு,

ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

அரை வருடத்தைக் கடந்து வந்திருக்கிற நாம் சற்றே திரும்பிப் பார்ப்போமானால் எத்தனை எத்தனை பெரிய காரியங்களையும் எண்ணி முடியாத அதிசயங்களையும் ஆண்டவர் எமது வாழ்வில் செய்துள்ளார். எல்லாவற்றிற்குமாக அவரைத் துதிப்போமாக!

அரை ஆண்டில் இவ்வளவு அதிசயங்களானால் இருநூறு வருடங்களில்?

ஆம். இலங்கை மெதடிஸ்த மிஷன் வாழ்வில் 199 ஆண்டுகளைக் கடந்து இருநூறாவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் தலைமுறையொன்றில் எம்மையும் சேர்த்ததற்காக ஆண்டவரைத் துதிப்போமாக!

மிஷனரிகள் எமது தேசத்தில் சுவிஷேஷத்தை கொண்டு வந்த நாள் முதல் இன்று வரை ஊழியத்தில் ஆண்டவர் செய்து வருகின்ற அளப்பரிய மகத்துவங்களை எண்ணிப் பார்த்து துதிக்கலாமே!

குறிப்பாக 199வது வருட பூர்த்தியையும் 200வது வருட ஆரம்பத்தையும் மிகச் சிறந்ததாக மட்டக்களப்பிலும் இன்னும் பல இடங்களிலும் நினைவு கூர்ந்த நாங்கள் இப் புதிய ஊழிய வருடத்தில் ஆண்டவருக்காக எதைச் செய்ய தீர்மானிக்கப் போகின்றோம்?

மிஷனரிகள் வந்தது உண்மை! அதே வேளை. மிஷனரிகளாக "நாம்" புறப்பட வேண்டிய வேளை வந்து விட்டது. இன்னுமொருவரின் வருகையை புகழ்ந்த நாங்கள் மற்றவர்களின் வாழ்வில் "இயேசு" என்னும் ஒளியை ஏற்ற ஆயத்தமாவோமா?

கிறிஸ்துவின் பணியில்
ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஜோன் வெஸ்லி

கனம் ஜோன் வெஸ்லி ஐயரின் வாழ்க்கைச் சரிதம் தொடர் நிகழ்வாய்.... (38)

**சகோ. இராஜநாயகம் சுரேந்திரன்**

கனம் ஜோன் வெஸ்லி ஐயர் அவர்களினால் கிறிஸ்தவ வாழ்வு தொடர்பு பட்ட நானூற்றுக்கும் மேற்பட்ட நூல்கள் வரலாற்றிலே எழுதப்பட்டுள்ளன. ஆனால் இவற்றில் அரைவாசிக்கும் மேற்பட்ட நூல்கள் எமது இலங்கை மண்ணில் இல்லை. பல நூல்களிலே இவருடைய எழுத்துக்களில் அமைதிவழிப்பிரவாகம் வழிந்தோடுவதைக் காணலாம். இதன்படி வெஸ்லி ஐயர் அமைதியான, ஒழுங்குள்ள வாழ்க்கையுள்ளவர். கூட்டங்களில் உண்டாகும் சத்தம், ஜெபக் கூட்டங்களில் மக்கள் பெரிதாக அழுவது போன்ற காரியங்களை அவர் விரும்புவதில்லை.

ஆனாலும் பரிசுத்த ஆவியானவர் மக்களின் மீது ஊற்றப்படும் போது, பாவ உணர்ச்சியைத் தாங்கமுடியாது அவர்கள் கதறி அழுதார்கள். இது பரிசுத்த ஆவியானவருடைய கிரியை என்பதை வெஸ்லி அவர்கள் காலப்போக்கிலே உணர்ந்துகொண்டார். ஆனாலும் இவருடைய மிகப்பெரிய பெருந்தன்மை என்னவென்றால் இப்படிப்பட்டவர்களை அவர் தடைசெய்யவில்லை. பரிசுத்த ஆவியானவரைத் துக்கப்படுத்தக் கூடாதென்ற முன்னெச்சரிக்கை, பயபக்தி என்பவற்றால் மிகக் கவனமுடன் இக்காரியங்கள் தொடர்பாக நடந்துகொண்டார். தினந்தோறும் ஒரு ஆத்துமா இரட்சிக்கப்படுவதோ அல்லது ஒரு குடிகார மனிதன் தன் பாவ வழிகளை விட்டுவிட்டு ஜீவ வழிகளை நோக்கி நடந்து வருவதோ நடைபெற்றுக்கொண்டே இருந்தது.

இக்காரியங்களிலே விசுவாசம் கொள்ளப் பின்வாங்குகின்ற மக்களுக்கும் கூட இச்செயற்பாடானது மிகுந்த ஆச்சரியங்களை உண்டாக்கிக்கொண்டிருந்தது. இது எப்படி நடக்கிறது? திடீரென மக்களின் மீது இறங்குகின்ற காரியம் என்ன? "மக்ஆதர்" எனப் பெயர் கொண்ட இங்கிலாந்தின் புகழ்பெற்ற மருத்துவர் ஒருவருக்கு இவை தொடர்பில் பலத்த சந்தேகம் ஏற்பட்டது! எப்படியாவது இக்காரியத்தில் நடைபெறும் ஊழல்கள், மோசடிகள், ஏமாற்றுக்கள் என்பவற்றைக் கண்டுபிடித்து, உலகிற்கு அறிவிக்கவேண்டுமென பெருவிருப்புக்கொண்டார். ஒரு கூட்டத்தில் வெஸ்லி ஐயர் அவர்கள் பிரசங்கித்துக்கொண்டிருந்த கூட்டத்தில் "மக்ஆதர்" என்ற இம்மருத்துவரும் கலந்துகொண்டு நடப்பவற்றை உற்றுப் பார்த்துக்கொண்டேயிருந்தார். அவருக்கு மிகவும் பழக்கமான ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுத்தரவயதுப் பெண் ஒருவரும் இக்கூட்டத்தில் கலந்து, உணர்வுபூர்வமான ஒரு கட்டத்திற்குள் கடந்து வந்துகொண்டிருந்தார்.

இம்மாற்றமானது "மக்ஆதர்" என்ற இம்மருத்துவருக்கு மிகவும் வியப்பாக இருந்தது. இது உண்மையாக இருக்கமுடியுமா என்பதை அவரால் நம்பக்கூடாமலிருந்து. மிகவும் அருகே சென்றார். ஒரு மருத்துவருடைய மனதோடு அந்த நிகழ்ச்சியை மிகக் கருத்தோடு கவனித்தார். முகத்தில் வியர்வை வழிந்தோடுவதையும் உடல் முழுதாக நடுங்குவதையும் அவர் பார்த்தார். இது போலியான வேலை அல்லவென்பது அவருடைய சிந்தனைக்குத் தெளிவாகப் புரிந்தது. அப்பெண்ணின் ஆத்துமாவும், உடலும் சிறிது நேரத்திற்குள் சுகமடைந்ததைக் கண்டபொழுது, இவை தேவகரத்தினால் நடைபெறும் காரியமென இங்கிலாந்து முழுவதும் சென்று அறிவித்தார்.

இவ்வாறாக "பிறிஸ்டல்" என்ற இடத்திலே செய்யப்பட்ட ஊழியம் மிக வேகமாகப் பரவ ஆரம்பித்தது. கர்த்தர் வெஸ்லி அவர்களால் செய்யப்பட்ட கூட்டங்களில் அபரிமிதமாக இறங்க ஆரம்பித்தார். ஊழியம் பெருக ஆரம்பித்ததின் விளைவாக இரண்டு கிறிஸ்தவ சங்கங்கள் ஒன்றாக இணைந்து இறைபணிக்கென ஒரு இடத்தினை வாங்க முற்பட்டனர். இங்கிலாந்தின் "ஹர்ஸ்பேர்" எனுமிடத்திலுள்ள ஒரு பெரிய வெளியில் காணப்பட்ட ஒரு இடத்தினை வெஸ்லி அவர்கள் விலைக்கு வாங்கினார். கையிலுள்ள சிறிதளவு பணத்தினை வைத்துக்கொண்டு ஆலயமொன்றைக் கட்ட ஆரம்பித்தார். ஏனைய பணவசதிகள் கிடைக்கக்கூடிய வழிகளும் தெரியவில்லை. "பூமியும் அதன் நிறைவும் கர்த்தருடையவைகள்" என்ற வேதாகம வார்த்தைகளை அவர் நன்கு அறிந்திருந்தபடியினால் பணவிடயத்தில் அவருக்கு எந்தவிதமான சந்தேகமும் எழுந்திருக்கவில்லை. தேவன் தேவையான பணத்தினைத் தருவார் என்ற விசுவாசத்துடன் ஆலயத்தைக் கட்டும் வேலையில் அவர்முன் சென்றார்.

1739ம் ஆண்டு வைகாசி மாதத்தின் ஒரு ஞாயிற்றுக்கிழமை தேவ ஆராதனையின் நேரம். பரிசுத்த ஆவியானவர் அபரிமிதமாக மக்களின் இருதயங்களில் ஊற்றப்பட்டார். கர்த்தருடைய பலத்த கிரியைகளின் உயர் மகத்துவத்தை திறந்த வெளியில் சுமார் இரண்டாயிரம் மக்கள் கண்ணாரக்கண்டார்கள். வெஸ்லி ஐயர் அவர்கள் அன்றைக்கு "நீங்கள் அமர்ந்திருந்து நானே தேவனென்று அறிந்து கொள்ளுங்கள்" என்பதான தலைப்பில் பிரசங்கித்துக்கொண்டிருந்தார். பரிசுத்த ஆவியானவருடைய அளவற்ற பிரசன்னம் அந்த இடத்தினை நிரப்ப ஆரம்பித்தது. வசனங்களைக் கேட்ட மக்கள் ஒன்றன்பின் ஒன்றாய் தரையிலே விழுந்து பாவ உணர்வடைய ஆரம்பித்தனர்.

பரிசுத்த ஆவியானவருடைய பிரன்னத்திற்கு முன்பாக அவர்கள் மிகவும் நடுங்கினார்கள். மற்றவர்கள் இரட்சிக்கப்படும் பொருட்டு நாங்கள் என்ன செய்ய வேண்டுமெனவேதனையோடு கேட்டார்கள். வெஸ்லி ஐயர் பார்த்துக் கொண்டிருக்கும்போதே சிலர் குழுக்கள் குழுக்களாக இணைந்து கர்த்தரை மிகுந்த வல்லமையோடும், ஆர்ப்பரிப்போடும் துதிபாட ஆரம்பித்தனர். கனம் ஜோன் வெஸ்லி ஐயர் அவர்களிடமிருந்து வரங்கள் புறப்பட ஆரம்பித்தன.

- வெஸ்லி மீண்டும் வருவார் -




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவனின் ஆலயம் நாமே

"உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களிலே தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நாங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா ? கிரயத்துக்கு கொள்ளப்பட்டீர்களே ; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்." (1 கொரிந்தியர் 6:19-20)

நம்மில் அநேகர், அளவுக்கு மீறி வேலைகளை செய்து, மிகவும் சோர்ந்து, களைப்படைந்துப் போகிறோம். ஒரேயடியாக வேலை வேலை என்று அதிலேயே கவனமாக இருப்பதால் நம் சரீரத்தை குறித்து கவலையற்றவர்களாக காணப்படுகின்றோம்.

நம்முடைய ஆவிக்குரியக் காரியங்களும், உணர்ச்சிகளுக்குரிய, சிந்தனைகளுக்குரிய காரியங்களும் நம் சரீரத்தோடு இணைக்கப் பட்டிருக்கின்றது. நம் சரீரத்தை கவனமாக பராமரிக்கத் தவறும் போது நம் சரீரம் மாத்திரமல்ல, நம்முடைய எல்லா சிந்தனை, உணர்ச்சி, ஆவிக்குரிய வகைகளிலும், நோய் வாய்ப்பட்டுப் போகிறோம். இந் நாட்களில் தொலைக்காட்சிகளில் நம் உடல் நிலையைக் குறித்த அநேக மருந்துகளையும், உடற்பயிற்சி கருவிகளையும் குறித்த விளம்பரங்களையும் காண்கிறோம். அந்த விளம்பரங்களைப் பார்த்து, வாங்கி, சரீரத்தின் தோல் சுட்டுக் கொண்டது தான் மிச்சம்!.




நாம் சற்று யோசித்துப் பார்ப்போம், நாம் எந்த அளவு நம்முடைய சரீரத்தை கவனமாக காத்துக் கொள்கிறோம் என்று; நாம் தேவையான அளவு தண்ணீரைக் குடிக்கிறோமா? வேலை வேலை என்று தண்ணீர் குடிக்கக் கூட நேரமில்லை என்று கூறுகிறோமா? எத்தனையோ வியாதிகளுக்கு தண்ணீர் மருந்தாக இருக்கிறது. ஏன், உடல் பருமனைக் குறைக்கவும் கூட தண்ணீர் அதிகமாக உதவுகிறது. சாப்பிட வேண்டிய உணவுகளை நாம் சாப்பிடுகிறோமா? இல்லாவிட்டால் ஏதோ வயிற்றை நிரப்ப வேண்டும் என்று எது கிடைக்கிறதோ அதை சாப்பிட்டு வயிற்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிரப்புகிறோமா? அநேகருடைய வேலை அமர்ந்தே செய்யும் வேலையாயிருக்கும். வேலை முடிந்த பிறகு நாம் ஒரு அரை மணி நேரமாவது நடக்கிறோமா? அது உடல் ஆரோக்கியத்திற்கு மிகவும் இன்றியமையாதது. தேவையான அளவு தூங்குகிறோமா? ஒரு நாளைக்கு ஆறு மணியிலிருந்து ஏழு மணி நேரம் தூங்க வேண்டும். ஆனால் வேலை வேலை என்று ஓய்வெடுக்காமல், தூக்கமில்லாமல், வேலை செய்து உடல் நலத்தைக் கெடுத்துக் கொள்வதால் என்ன பயன்?

அநேகர், சரியான நேரத்தில் உணவருந்த மாட்டார்கள் வேலை வேலை என்று பிஸியாக இருந்துவிட்டு, நேரம் கெட்ட நேரத்தில் சாப்பிடுவார்கள். வயிற்றில் அல்சர் வந்த பிறகு மருந்து எடுத்து என்ன பயன்? சிலர் காலை வேளை எதையும் சாப்பிடமாட்டார்கள். ஆனால் இரவு வேளை உணவை விடலாம். ஆனால் காலை வேளை உணவு மிகவும் முக்கியம். அது Breaking the Fast அதனால் தான் அது Breakfast.

சிலர் புகை பிடித்து, அல்லது வேறு காரியங்களுக்கு தங்கள் சரீரங்களில் இடம் கொடுத்து அதை அசுத்தப்படுத்துகிறார்கள். நமது சரீரம் தேவனுடைய ஆலயமாக இருப்பதால் அவற்றை நாம் கண்டிப்பாக நிறுத்தியே ஆக வேண்டும். நீங்கள் உங்களுடையவர்களல்லவென்று அறியீர்களா? இயேசு கிறிஸ்து தம் மாசில்லாத இரத்தத்தை சிந்தி உங்களை மீட்டுக் கொண்டாரே, இயேசுகிறிஸ்து தமது குற்றமில்லாத இரத்தத்தை கிரயமாக செலுத்தி உங்களை மீட்டுக் கொண்டாரே, பின் எப்படி அதைக் கெட்ட காரியங்களுக்கு பயன்படுத்த முடியும்?.

சாப்பிட வேண்டிய அளவு சாப்பிட்டு, தூங்க வேண்டிய அளவு தூங்கி, நடக்க வேண்டிய அளவு நடந்தால், நாம் உடல் நலத்தை தக்க வைத்துக் கொள்ளலாம். என்ன தான் சுவையாக இருக்கட்டும், குறிப்பிட்ட அளவு மாத்திரம் சாப்பிட்டு, தங்கள் உடல் நலத்தைக் காத்து அநேகருக்கு பிரயோஜனமாயிருக்கும்படி, கர்த்தருடைய ஊழியத்தை செய்யும்படி தங்களை கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ளுங்கள்.

கர்த்தருக்கென்று பெரிய காரியங்களை சாதிக்க வேண்டுமா? உங்கள் மன நிலையும் சிந்தனைகளும் சரியாக வேலை செய்ய வேண்டாமா? உங்கள் உடல் நலத்தை பேணிக் கொள்ளுங்கள். நமது சரீரம் தேவனுடைய ஆலயமாயிருக்கிறபடியால், ஆவியானவர் வாசம் செய்யும் ஆலயமாயிருக்கிறபடியால், நாம் நமது சரீரத்தை ஜாக்கிரதையாக பாதுகாத்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறோம். ஆகையால் தேவனுக்கு உடையவைகளை நமது சரீரத்தினாலும் நமது ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துத்தும் படியாக நமது சரீரங்களை சரியானபடி காத்து அவருக்கென்று சாட்சியாக இன்னும் அநேக ஆண்டுகள் வாழ்ந்து அவரை மகிமைப்படுத்துவோமாக! ஆமென்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணியில் பிணக்கு (அப்போ 6:1-6)

ஆக்கம் :
அருட்தந்தை அருளம்பலம் ஸ்ரீபன்
இலங்கை இறையியல் கல்லூரி
பிலிமத்தலாவ.



திருப்பணியில் பல்வேறுபட்ட முரண்பாடுகளுக்கு நாம் முகம்கொடுக்க வேண்டிய சூழல் ஏற்படலாம். இப்பேர்ப்பட்ட சந்தர்ப்பத்தை நாம் இங்கு காணலாம். கிரேக்க மொழி பேசிய கிறிஸ்தவ விதவைகளுக்கும், எபிரேய மொழி பேசிய விதவைகளுக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்பட்டதைக் காணலாம். தேசியவாதத்தின் விளைவாக கிரேக்க மொழி பேசிய விதவைகள் போஷிக்கப்படாத சூழ்நிலை இங்கு காணப்படுகின்றது. இத்தகைய சூழ்நிலைகளில் அப்போஸ்தலர்களிடத்தில் இப் பிரச்சனை கொண்டுவரப்படுகின்றது. எனினும் அப்போஸ்த்தலர்கள் நற்செய்தியை அறிவிப்பதே எமது பணியாகும் என கூறினர். இக்கூற்றின்படி திருப்பணிகளில் பிணக்குகள் ஏற்பட்டாலும் அவைகள் எமது அழைப்பின் நோக்கத்தை மாற்றிவிடாத வகையில் பார்த்துக்கொள்ளவேண்டும்.

அப்போஸ்தலர்கள் இப் பிரச்சனைக்கு தீர்வு காணும் வகையில் உடனடியாக முயற்சிகளை எடுத்தனர். சிறப்பாக ஏழுபேர் கொண்ட குழுவினை நியமித்தனர். அவர்கள் தேவனின் ஆவியால் நிரப்பப்பட்டவர்களாகவும், ஞானமுள்ளவர்களாகவும் மக்கள் மத்தியில் நன்மதிப்புள்ளவர்களாகவும் இருந்தனர். இதன் ஒளியில் பிரச்சனைகளைத் தீர்க்க முற்படுபவர்கள் கடவுளாலும் மனிதர்களாலும் அங்கீகரிக்கப்பட்டவர்களாக இருக்கவேண்டும். என்ற உண்மை புலனாகின்றது. மாறாக அவர்கள் பிரச்சனைகளை உருவாக்குபவர்களாக இருக்கக்கூடாது.

இத்தகைய சூழ்நிலையில் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரச்சனையோடு நெருங்கிய தொடர்பில்லாத தன்மையை நாம் காணலாம். குறிப்பாக பிரச்சனையால் பாதிக்கப்பட்ட மக்களாக பெண்களே காணப்பட்டனர். ஆனால் பெண்கள் இக்குழுவில் இடம்பெறாத நிலை கவலைக்குரிய ஒன்றாகும். ஏனெனில் பாதிக்கப்பட்டவர்கள் வேறாகவும் தீர்வு வழங்குவபவர்கள் வேறாகவும் இருக்கும் நிலை நாம் இங்கு காணலாம். இத்தகைய நிலையை நாம் எமது திருப்பணிகளில் தவிர்க்க முற்படவேண்டும்.

எமது திருப்பணிகள் எல்லாவற்றையும் கையாளக்கூடிய தன்மை எங்களிடத்தில் காணப்படமாட்டாது. அத்தகைய சந்தர்ப்பங்களில் தேர்ச்சி பெற்றவர்களின் உதவியை நாடுவது மிகவும் வேண்டப்படும் ஒன்றாகும். இதனூடாக கூட்டுச் செயற்பாடு விருத்தியடைவதனால் சிறந்த பலாபலன்களை பணிகளில் நாம் அனுபவிக்கலாம். இதற்கூடாகப் பிணக்குகளை இலகுவில் கையாளக்கூடிய சூழல் ஏற்படுகின்றது.

○ ○ ○



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்தவ சீடத்துவம்

## சீடன் என்பவன் யார்?

- குருவைப் பின்பற்றுபவன் சீடன். அவர் ஆன்மீக காரியங்களையோ, சமய விடயங்களையோ அல்லது உலக காரியங்களை போதிப்பவராக இருக்கலாம்.
- தனது குருவைப் போன்றும், தனது குருவின் போதனைகளின் படியும் வாழ்பவன்.
- குருவின் கொள்கைகளையும் தராதரங்களையும் கடைப்பிடிப்பவன்.
- தன் குருவைப் போன்று மாற வாஞ்சிப்பவன்.
- கிரேக்க மொழியில் சீடன் என்பதற்கு கொடுக்கப்பட்ட பதம் மதட்டஸ் (mathetes), இதன் பொருள் மாணவன், பயிலுனன் என்பவையாகும்.

## இயேசுவின் சீடனாவது எப்படி?

- கிறிஸ்தவ சீடத்துவத்தின் ஆரம்பம் 'இயேசுக் கிறிஸ்துவை பின்பற்றுவேன்' எனத் தீர்மானிப்பதே.
- இயேசு தாமே, தனக்கு சீடனாக இருப்பவன் எப்படி இருக்க வேண்டும் என்ற நிபந்தனைகளை தெளிவாக தமது நடைமுறை வாழ்வில் காண்பித்திருக்கிறார்.
- சீடத்துவம் என்பது
    - மலர் மஞ்சம் போன்று மென்மையான ஒன்றல்ல, இலகுவானதும் அல்ல.
    - அது தொடர் வெற்றிகளும் செல்வச் செழிப்பும் நிறைந்ததல்ல.
    - காலத்தைக் கழிப்பதற்கான பொழுது போக்கும் அல்ல.
    - வாரா வாரம் ஞாயிறன்று தவறாது ஆலயம் செல்வதும் அல்ல.
    - விட்டுக்கொடுப்புகளோ, அல்லது எதையும் செய்வதற்கான அங்கீகாரமோ அல்ல.

## எனவே மெய்யான கிறிஸ்தவ சீடனாவதற்கான கிரயம் / விலை (நிபந்தனைகள்) எவை?

1. சிலுவை சுமத்தல்.
    - மத்தேயு 16 : 24 – "ஒருவன் என்னைப் பின் பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்.''

- மத்தேயு 10 : 38 – "தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றாதவன் எனக்குப் பாத்திரன் அல்ல.''
- கலாத்தியர் 2 : 20 – "கிறிஸ்துவுடனே கூடச் சிலுவையிலறையப்பட்டேன் ஆயினும், பிழைத்திருக்கிறேன் இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்.''
- சிலுவையின் வழி; வலியும், துன்பம் சகித்தலும், அபாத்திரன் என்று எண்ணப்படுதலும், நகைப்புக்கிடமாதலும், தன்னைத் தாழ்த்தலுமே!!
- அத்துடன், பாவ சிந்தையை சிலுவையில் அறைதலும். கலா : 5 : 24 – "கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்''

2. தன்னை வெறுத்தல்.

1. மத்தேயு 16 : 24 – "ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்''.
2. அவர் சித்தத்தை செய்வதே நம் பிரதான கடமையாக இருக்க வேண்டும்.

## வரலாற்றை பதிவு செய்த நிகழ்வு

**200வது** மெதடிஸ்த தினத்தை முன்னோக்கிய இலங்கை மெதடிஸ்த திரு அவையின் பயணத்தில் முக்கிய நிகழ்வாக இலங்கையில் மிசனரிகளால் ஆரம்பிக்கப்பட்ட மூன்று திருச்சபைகளில் வரலாற்று சிறப்பு மிக்க நினைவுக் கல் திரைநீக்கம் செய்யப்பட்டது. முதலாவது கல் தென் திருமாவட்டத்தின் மொரட்டுமுல்ல மெதடிஸ்த திரு அவையிலும் இரண்டாவது கல் மத்திய திரு மாவட்டத்தின் புறக்கோட்டை மெதடிஸ்த திரு அவையிலும் மூன்றாவது கல் வடக்கு கிழக்கு திருமாவட்டத்தின் புளியந்திவு மெதடிஸ்த திரு அவையிலும் திரைநீக்கம் செய்யப்பட்டது. புளியந்தீவு மெதடிஸ்த திருச்சபையில் வரலாற்று சிறப்பு மிக்க நிகழ்வு மெதடிஸ்த தினமன்று மாலை 5 மணிக்கு மெதடிஸ்த மிசனரிகளால் ஆரம்பிக்கப்பட்ட வின்சன்ட் பெண்கள் பாடசாலையின் முன்னாலிருந்து ஊர்வலமாக ஆரம்பமாகியது. இந் நிகழ்விற்கு அதிதிகளாக மெதடிஸ்த திரு அவையின் தலைவர் அருட்கலாநிதி. A.W.ஜெபநேசன், திருமாவட்ட அவைத் தலைவர்களான அருட்திருவாளர்கள் தயாசீலன், ஆசிரி பெரேரா, சுமித் வீரமுண்ட, மட்டக்களப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி P.S.M. சார்ள்ஸ், கிழக்கு பிராந்திய பிரதி பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர, மட்டக்களப்பு மாநகர சபை ஆணையாளர், மெதடிஸ்த மத்திய கல்லூரியின் மூத்த பழைய மாணவரும் முன்னாள் மெதடிஸ்த மத்திய கல்லூரி அதிபரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான திரு. பிரின்ஸ் காசிநாதர், மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரி அதிபர், மட்டக்களப்பு வின்சன்ட் பெண்கள் உயர்தர பாடசாலை அதிபர் மற்றும் அங்கிலிக்கன் திருச்சபை, தென்னிந்திய திருச்சபை, அமெரிக்கன் இலங்கை மிசன் திருச்சபை, கத்தோலிக்க திருச்சபை, சுயாதீன வழிபாட்டு சபை பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். வரலாற்று சிறப்பு மிக்க நினைவுக்கல்லானது மட்டக்களப்பு



அரசாங்க அதிபர் மற்றும் கிழக்கு பிராந்திய பிரதி பொலிஸ்மா அதிபர் ஆகியோரால் திறந்து வைக்கப்பட்டு மெதடிஸ்த திருச்சபை தலைவர் மற்றும் வடக்கு கிழக்கு திருமாவட்ட அவை தலைவர் ஆகியோரால் திரை நீக்கம் செய்யப்பட்டது.











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசித்திருந்த குருவிக் குஞ்சுகள் -
சாது சுந்தர் சிங் உவமை



# காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள்

ஒரு தடவை மலைப்பாங்கான இடத்தில் நடந்து திரிந்து மேட்டுநிலப்பரப்பில் இருந்த உயரமான பாறையின் மீது ஏறி அமர்ந்து இளைப்பாறிக் கொண்டிருந்தவனாக சமவெளியை நோக்கிக் கொண்டிருந்தேன். அப்பொழுது மரக்கிளைகளில் ஓர் குருவிக்கூட்டைக் கண்டேன். அக்கூட்டில் இருந்த குருவிக் குஞ்சுகள் சத்தமிட்டுக் கத்திக் கொண்டேயிருந்தன. அப்போது தாய்ப்பறவை எப்படியாக தன் குஞ்சுகளுக்கு உணவைக் கொண்டு வருகிறது என்பதைக் கவனித்தேன். குஞ்சுகள் தாய்ப்பறவையின் இறக்கையின் சத்தத்தைக் கேட்டு அதன் ஸ்பரிஸத்தை தம்மருகில் உணர்ந்த மாத்திரத்திலேயே, இன்னும் அதிகமாக கூச்சலிட்டுக் கத்தியவாறே தம் அலகுகளை விரிவாகத் திறந்து காட்டின. ஆனால் தாய்ப்பறவை உணவூட்டி விட்டுப் பறந்து சென்ற பின்னர் மீண்டும் அமைதலாயின. இன்னும் அருகில் சென்று பார்க்கலாமென இறங்கி நெருங்கிய போது, புதிதாக வெளிப்பட்ட குஞ்சுகள் இன்னமும் கண்களைத் திறக்காது இருந்ததைக் கண்டேன். தம் தாயைக் கண்களால் காணக்கூடாதிருந்தும், எப்போதெல்லாம் தாய்ப்பறவை உணவுடன் அணுகினாலும் அவை தமது அலகினைத்திறந்து தாம் போஷிக்கப்படவேண்டும் என்பதற்காக வேண்டிக்கொண்டன.

"நாங்கள் எங்கள் தாயைத் தெளிவாகப் பார்க்கும் வரையிலும், அவர் கொண்டுவரும் உணவு என்ன வகை என்பதைப் பாராமலும் எங்கள் அலகுகளைத் திறக்கமாட்டோம். ஒருவேளை அது எங்கள் தாயாக இராமல் வேறு பயங்கர எதிரியாகக்கூட இருக்கலாம். எங்களுக்கு கொடுக்கப்படுகிற உணவு சரியான போஷணையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கிறதா, இல்லை ஏதேனும் நச்சுப்பொருளோ? யாருக்குத் தெரியும்? " என்பதாக இந்தக் குஞ்சுகள் ஒருபோதும் சொன்னது கிடையாது. அக்குஞ்சுகள் இவற்றைப் போட்டு அலட்டிக் கொண்டு இருந்திருக்குமேயா னால், உண்மை எதுவென்பதை ஒருபோதும் அறிந்திருக்க முடியாது. தம் கண்களைத் தானும் திறந்துபார்க்கத் திராணியின்றி பட்டினியால் இறந்தே போயிருக்கும். ஆனால் அக்குஞ்சுகளுக்கோ தம் தாயின் ஸ்பரிஸத்திலோ அன்பிலோ அப்படியான ஐயப்பாடுகள் ஏதும் இருக்கவில்லை. மிகசொற்ப நாட்களிலேயே அவை தம் கண்களைத்திறந்து தாய் தங்களுடன் இருப்பதைப் பார்த்துப் பேரானந்தமடைந்தன. நாளடைவில் அவை வளர்ந்து பெலனடைந்து தம் தாயின் சாயலுக்கொப்பாக மாறிய மாத்திரத்திலே அவை சுதந்திர வான்வெளியில் உயரங்களை



அறியவும், அடையவும் ஆரம்பிக்கின்றன.


மனிதர்களாகிய நாம் நம்மைக் குறித்து; வாழும் உயிர்களில் சிறந்தவர்களும் விசேஷித்தவர்களும் என நினைத்துக்கொண்டாலும், இச்சிறிய குருவிகளிடமிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்களும் இருக்கின்றன அல்லவா?. நாம் கடவுளின் உண்மைத் தன்மையையும் அவரின் அன்பையுங்குறித்து அடிக்கடி கேள்வி கேட்கிறவர் களாகவே இருக்கிறோம். ஆனால் நம் ஆண்டவராகிய கிறிஸ்துவோ "நீ என்னைக் கண்டதினாலே விசுவாசித்தாய், காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள் என்றார்." (யோவான் 20:29). எப்போதெல் லாம் நாம் எம் இருதயத்தை ஆண்டவருக்குத் திறந்து கொடுக் கிறோமோ அப்போதெல்லாம் நமக்குத் தேவையான ஆவியின் அபிஷேகங்களை நமக்குத் தந்து நாம் ஆவிக்குரிய முதிர்ச்சியை அடையும் வரை கர்த்தரின் சாயலில் வளர்கிறதற்கு நம்மை திடப்படுத்தி பெலப்படுத்துகிறார். நம் ஆவிக்குரிய கண்கள் திறக்கப்படுகையில் நாம் கர்த்தரின் பிரசன்னத்தைக் கண்ணாரக் காணுகையில் விவரிக்கமுடியாத முடிவில்லாப் பேரானந்தமடைவோம்.

○ ○ ○



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறுக்கெழுத்துப் போட்டி இல.: 69




உருவாக்கம்
சேரா

**இடமிருந்து வலம்**

3. ஆபிரகாம் முதல் தாவீது வரைக்குமான தலை முறைகள் இத்தனையாகும்.
4. தானியேல் தன் தரிசனத்தில் கண்ட 3வது மிருகம் இதைப் போலிருந்தது.
6. தேவன் நம்மை முத்திரித்து, நம் இருதயங்களில் ஆவியென்னும் இதையும் கொடுத்திருக்கிறார்.
8. "செத்த சிங்கத்தைப்பார்க்கிலும் உயிருள்ள நாய் ..........".
10. அமலேக்கை முறியடித்த கர்த்தருக்கு மோசே பலிபீடங்கட்டி, யெகோவா...... என்று பேரிட்டான் (திரும்பியுள்ளது).
12. கர்த்தருடைய சத்துவத்தின் இதிலும் நாம் பலப்படவேண்டும் (முதல் 2 எழுத்துக்களுமில்லாமலிருப்பதுடன் திரும்பியுள்ளது).
13. யோபுவின் புஸ்தகத்தில் வரும் ஒருவகைப் பாம்பு.
16. "பாவஞ் செய்கிற ஆத்துமாவே ..........." (குழம்பியுள்ளது).
17. எபிரோனிலுள்ள ஓர் சமபூமி குழம்பியுள்ளது.
18. மாம்சத்தின் உயிர் இதிலிருக்கிறது.
19. யெகோவா ........ என்பது தேவன் இருக்கிறார் என அர்த்தம் கொள்ளும் சொல்லாகும்.

**மேலிருந்து கீழ்**

1. மன்னாவின் இது தேனிட்ட பணிகாரத்திற்கு ஒப்பாய் இருந்தது.
2. யாக்கோபு பலவருணமான இதை யோசேப்புக்குக் கொடுத்தான் (தலைகீழ்).
5. "காட்டுமரங்களுக்குள்ளே .......... மரம் எப்படியோ, அப்படியே குமாரருக்குள்ளே என் நேசர் இருக்கிறார்".
7. சோதோமின் பாவங்களிலொன்று (குழம்பியுள்ளது).
8. தேவன் ஒருவராய், இது உள்ளவரும், சேரக்கூடாத ஒளியில் வாசம்பண்ணுகிறவருமாயிருக்கிறார் (குழம்பியுள்ளது).
9. ஆகாயத்தை அடிக்கிறவனாக இதுபண்ணேன் என்கிறார் பவுல்.
11. இதை மிகுதியாய் உண்பது நல்லதல்ல.
14. ஏனோக்கின் தகப்பன்.
15. கர்த்தர் தம்முடைய வாக்குத்தத்தத்தைக் குறித்து இப்படியிராமல், எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்.

**குறிப்பு : சென்ற குறுக்கெழுத்துப் போட்டியில் (65) ஏற்பட்ட தவறுக்கு வருந்துகின்றோம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 65 ற்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

01. கர்மேல்
06. போநே (நேபோ)
07. தாதி
09. சமுத்திரம்
11. டிஅ (அடி)
13. ப்தாயெ (யெப்தா)
14. எப்னேபுன் (எப்புன்னே)
15. வுயத (தயவு)
17. நூல்
19. சேத்
20. ஸ்போ (போஸ்றா)
21. ல்கீக்லநி (நிலக்கீல்)

**மேலிருந்து கீழ்**

02. ர்போ (போர்)
03. மேநேச (நேசமே)
04. யாதிதியெ (யெதிதியா)
05. ந்திம்னயாதத்நி
07. தாத்தான்
08. ட்டிஎ (எட்டி)
10. முப்புரிநூல்
12. அப்பாலேபோ
16. யசேல (லசேய)
18. ல்கீ (கீல்)

குறுக்கெழுத்துப் போட்டி 64 ற்கான சரியான விடை அனுப்பியவர்களில் பரிசுக்குரிய வெற்றியாளரின் பெயர் அடுத்த இதழில் பிரசுரிக்கப்படும்.

இப் போட்டியில் வெற்றி பெறுபவர் ஒரு வருடத்திற்கான எம் இதழைத் தொடர்ந்து பெறுவார்

**குறுக்கெழுத்துப் போட்டி 66 ற்கான விடைகளை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி**

**10 . 08 . 2013**

**அனுப்ப வேண்டிய முகவரி**

**ஆசிரியர்,**
**குறுக்கெழுத்துப் போட்டி,**
**"வாலிபன்"**
**கோட்டைமுனை மெதடிஸ்த ஆலயம்,**
**மட்டக்களப்பு.**

# சிறுவர்களுக்கான

## வினா விடைப் போட்டி இல. - 59



1. பிலிப்பி பட்டணத்தில் பவுலினால் ஞானஸ்நானம் பெற்ற இரத்தாம்பரம் விற்கும் பெண் யார்?
2. அவள் எந்த ஊரைச் சேர்ந்தவள்?
3. தெசலோனிக்கேயாவில் பவுலையும் சீலாவையும் தன் வீட்டில் ஏற்றுக்கொண்டவன் யார்?
4. பவுல் தெசலோனிக்கேயாவை விட்டு அடுத்து போன இடம் எது?
5. அத்தனே பட்டணத்தில் பவுல் தேவனைப் பற்றி மக்களுடன் பேசிய மேடையின் பெயர்?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☹ இப் போட்டியில் வெற்றி பெறுபவர் அழகிய புத்தகம் ஒன்றை வெற்றி பெறுவர்

☹ வினா விடைப் போட்டி 58ற்கான விடைகளை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி :
**10.08.2013**

### வினா விடைப் போட்டி 57 ற்கான விடைகள்

01. இத்தாலியா
02. தபீத்தாள்
03. சீமோன்
04. மூன்று
05. செசரியா

### அனுப்ப வேண்டிய முகவரி

**ஆசிரியர்,**
**வினா விடைப் போட்டி இல. 59,**
**"வாலிபன்"**
**கோட்டைமுனை மெதடிஸ்த ஆலயம்,**
**மட்டக்களப்பு.**

### வெற்றியாளர்கள்

**56** ச.தேவசலோமி
21/18, புதுமுகத்துவார வீதி,
கல்லடி, மட்டக்களப்பு.

**57** சு.தர்ஷாயினி
கடற்கரை வீதி, 1ம் குறுக்கு,
கல்லடி, மட்டக்களப்பு.

### போட்டி பற்றிய நிபந்தனைகள்

- 16 வயதிற்குட்பட்டவர்களாய் இருக்க வேண்டும்.
- ஞாயிறு பாடசாலை அதிபர் / ஆசிரியரின் கையொப்பத்துடன் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் போன்றவை தெளிவாய் எழுதப்பட்டிருக்க வேண்டும்.



**மெதடிஸ்த மிஷன் இன் 200 வது ஆண்டுக்குள் காலடி எடுத்து வைக்கும் வரலாற்று சிறப்பு மிக்க தருணத்தில் வடக்குகிழக்கு திரு மாவட்டத்தின் 200வது ஆண்டின் அங்குராட்பன வழிபாடும் பவனியும் 16.6.2013 கோட்டைமுனை மெதடிஸ்த ஆலயத்தில் இடம் பெற்றபோது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதினதின் காலத்திலே...!

"அவர் சகலத்தையும் அதினத்தின் காலத்திலே நேர்த்தியாகச் செய்திருக்கிறார்"
(பிர - 3:11)



நம்முடைய தேவன் ஒவ்வொன்றையும் அதினத் தின் காலத் திலே நேர்த்தியாய், செவ்வையாய் நடத்தி வருகிற தேவன். பல வேளைகளில் நாம் அவசரப் பட்டாலும், கர்த்தரோ நிதானமாய், ஏற்ற காலத்திலே ஒவ்வொன்றையும் அருமையாய் நிறைவேற்றி முடிப்பார்.

வானாதி வானங்களுக்கு மேலாக நம்முடைய கண்களால் காணமுடியாத தேவனுடைய கடிகாரம் இருக்கிறது. அது நேரம் தவறாத கடிகாரம். வானத்திலேயும், பூமியிலேயும், பூமியின் கீழேயும் உள்ள ஒவ்வொரு செயல்களும் அந்த கடிகாரத்தின் திட்டப்படியே ஒழுங்காகவும், கிரமமாகவும் நிறைவேறி வருகிறது. பாருங்கள் அதிகாலையில் சரியான நேரத்திற்கு சூரியன் உதிக்கிறது. குறித்த வேளையில் அது அஸ்தமிக்கிறது. பெரும் கடல் அலைகளோ, வீசும் புயலோ குறித்த நேரத்தில் அடங்கி அமைதியாகிறது. சாலமோன் ராஜா கூறிகிறார்; "அவர் சகலத்தையும் அதினத்தின் காலத்திலே நேர்த்தியாய் செய்திருக்கிறார்".

பல ஆண்டுகள் ஆபிரகாமுக்கு குழந்தை இல்லாமல் இருந்தது. ஆபிரகாம் தவித்து மனம் சோர்ந்து போனார். கர்த்தருடைய கடிகாரம் ஓடிக்கொண்டேயிருந்தது. வேதம் சொல்லு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கிறது தேவன் குறித்த நேரத்தில் ஆபிரகாமுக்கு ஒரு குமாரனைக் கொடுத்தார் (ஆதி 21:2), இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தின் அடிமைத்தனத்திலே பல ஆண்டுகள் தவித்தார்கள். ஆனால் அவ் அடிமைத்தனத்தை நீக்க கர்த்தராகிய ஆண்டவர் குறிப்பிட்ட காலத்தை குறித்திருந்தார் (யாத் 9:5) அன்பானவர்களே, இன்று நீங்களும் ஒரு வேளை அடிமைத் தனத்தில் வாழக்கூடும். ஆனாலும், கர்த்தர் உங்கள் பிரச்சனைகளையெல்லாம் அறிந்திருக்கிறார். அவருடைய கடிகாரம் உங்களுக்கு விடுதலை தரும் நேரத்தை நெருங்கிக் கொண்டேயிருக்கிறது.

நீண்ட காலம் காத்திருப்பது ஒருவேளை உங்கள் இருதயத்தை இளைக்கப்பண்ணக் கூடும். ஆனால் விரும்பினது வரும் போதோ, ஜீவ விருட்சம் போல் இருக்கும். நீங்கள் நீண்ட நாட்களாய் எதிர்பார்த்திருக்கிற ஆசீர்வாதங்கள் வரும் போதும், நீங்கள் காத்திருந்ததெல்லாம் நன்மைக்காகவே என்பதை அறிந்து கொள்வீர்கள்.

மனுஷனுக்குப் பல காரியங்கள் செம்மையானதாய், தோன்றக்கூடும். மனுஷன் எப்பொழுதுமே அவசரப்பட்டு தன் சுய பலத்தினாலே கிரியை செய்ய முயற்சிப்பான். ஆனால், தேவ பிள்ளைகளோ தங்கள் பாரத்தை கர்த்தர் மேல் வைத்து, அவருடைய பாதத்திலே காத்திருந்து, மேன்மையான ஆசீர்வாதங்களை பெற்றுக் கொள்ளுவார்கள். ஏற்ற காலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள் என்று குறிப்பிடுகிறார். (1 பேதுரு 5:6)

சங்கீதக்காரன் சொல்லுவதைப் போன்று என் காலங்கள் உமது கரத்திலிருக்கிறது. (சங் 31:15) **எனக்கு அன்பானவர்களே, உங்களுடைய காலங்கள் கர்த்தருடைய கரத்தில் இருக்கிறது. அவர் ஒரு நிமிடமும் பிந்தவும் மாட்டார், முந்தவும் மாட்டார்.**

**அ. கரோலினா,**
**கோட்டைமுனை.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






- ஜீவந்தி அக்கா -

# பரிட்த்தில் அன்ப


ஒரு நகரையண்டிய கிராமத்தில் ரூபன் எனும் 12 வயது சிறுவன் தன் தாயுடன் வசித்து வந்தான். அவனுக்கோ தந்தை இல்லை. அந்தக் குடும்பத்தின் மூத்த மகனாகவும், இவனுக்கு இரண்டு தங்கைகளும் இருந்தனர். குடும்ப கஷ்டம் காரணமாக பாடசாலைக் கல்வியை இடை நிறுத்தி விட்டு பாடசாலை அருகிலுள்ள ஒரு கடையில் வேலைக்குச் செல்ல ஆரம்பித்தான். எனினும் அவன் தன்னுடைய பாடசாலை நண்பர் களை சந்தித்து அடிக்கடி கதைத்து அவர்களுடன் எப்போதும் நட்பாக பழகுவான். இவனுடைய நண்பனான டேவிட் மற்ற நண்பர்களைப் பார்க்கிலும் ரூபனுடன் மிகவும் அன்பாக இருந்தான். டேவிட்தான் அவனது வகுப்பில் முதலாமிடத்தை பெறுவான். டேவிட் அவன் வகுப்பில் உள்ள அனைவருடனுமே அன்பாக பழகுவான். டேவிட்டை அனைவருக்கும் பிடிக்கும். ஆனால் அவர்களது வகுப்பிலுள்ள ரவிக்கோ இவனைப் பிடிக்காது.

ரவி அடிக்கடி டேவிட்டுக்கு ஏதாவது தீங்கு செய்துகொண்டேயிருப்பான். எனினும் ரவிதான் அதை செய்தது என்று யாருமே அறிய முடியாதபடி செய்வான். எனினும் டேவிட் ரவிமீது அன்பு செலுத்தினான்.

2ம் தவணைப் பரீட்சைக்கு ஒரு கிழமை இருந்த வேளையில் டேவிட் இந்த தடவை முதலிடத்திற்கு வரக்கூடாது என்று அவனுடைய கொப்பிகளைத் திருடி ரூபன் வேலைசெய்த கடையில் பழைய கடதாசியாக விற்று அந்தப்பணத்திற்கு இனிப்பு வாங்கி ரவியும் அவனது நண்பர்களும் சாப்பிட்டு விட்டனர். டேவிட் வழமை போல ரூபனைச் சந்திக்கச் சென்று தனது கொப்பிகள் திருடப்பட்டு விட்டதைச் சொல்லிக் கொண்டு இருந்தான். அப்போது கடைக்கு சீனி வாங்க வந்த ஒருவருக்கு டேவிட்டின் கொப்பியிலிருந்த தாள் சுற்றப்பட்டுக் கொடுப்பதை டேவிட் கவனித்து இது "என்னுடைய கொப்பி இங்கே எப்படி வந்தது?" என்று கேட்டான். ரூபன் அவனிடம் ரவிதான் இதை விற்றுச் சென்றான். அவன்தான் அப்படி என்றால் உன்னுடைய கொப்பிகளை திருடியிருக்கவேண்டும் என்றான். ஆனால் டேவிட்டோ அவன் ஏன் அப்படி செய்தான் என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் நான் இதை அவனிடம் போய்க் கேட்கமாட்டேன். நான் அவனை மன்னித்துவிட்டேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எனக் கூறி தனது கொப்பிகளை வாங்கிச் சென்றான். இதேபோல ஆண்டிறுதிப் பரீட்சையில் ரவியின் கொப்பிகள் களவாடப்பட்டன. ரவிக்கு என்ன செய்வது என்று தெரியாமல் யோசித்துக் கொண்டிருக்கும் போது டேவிட் தனது கொப்பிகளை கொடுத்துதவினான். ரவி தன்னுடைய தவறை அப்போது உணர்ந்து டேவிட்டிடம் உன்னுடைய கொப்பிகளை நான் திருடி விற்றேன். ஆனால் நீ, உன்னுடைய கொப்பியைத் தந்து உதவினாய் என்னை மன்னிப்பாயா? என்று கேட்டான். டேவிட் அவனை மன்னித்து இருவரும் நல்ல நண்பர்களாகிவிட்டனர். டேவிட் இயேசப்பாவையும் பற்றி அவனிடம் கூறத் தொடங்கினான்.

என் அன்புத் தம்பி, தங்கைகளே! உங்களுக்கு இவ்வாறு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தால் என்ன செய்வீர்கள்? மன்னிப்பு வழங்குவீர்களா? அல்லது உங்கள் நண்பர் கஷ்டப்படட்டும் என்று விடுவீர்களா? "உங்கள் பகைவர்களை சிநேகியுங்கள்" என்று மத்யேயு 5:44 இலும் "உன்னிடத்தில் நீ அன்பு கூருவது போலப் பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக" என்று மத்யேயு 22:39இல் கூறப்பட்டுள்ளது. என் அன்புச் சகோதரர்களே சற்று நாம் சிந்திப்போம். நாம் இயேசப்பாவின் பிள்ளைகள் நாம் பிறரிடத்தில் அன்பு கூரவேண்டும் சிந்திப்போம்! செயல்படுவோம்!.









200வது ஆண்டின் நினைவுக்கல் தென் மற்றும் மத்திய திருமாவட்டங்களில் திரைநீக்கம் செய்யப்பட்டபோது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கர்த்தரிடமிருந்து பெரிய காரியங்களை எதிர்பார்,
கர்த்தருக்காக பெரிய காரியங்களை செய்ய எத்தனி.
William Carey



உங்கள் ஜெபத் தேவைகளை எங்களுக்கு தபால் மூலமாகவோ மின்னஞ்சல் மூலமாகவோ குறுஞ்செய்தி மூலமாகவோ அனுப்பி வைக்கலாம். நாங்களும் உங்களுடன் சேர்ந்து உங்களுக்காக ஜெபிப்போம்.

**SMS க்கான இலக்கங்கள்:**

077-7813269 077-2335106
077-9584930 077-7718847

இப்புத்தகத்தை தங்களது சபைகளிலும், அறிமுகம் செய்ய விரும்புபவர்கள் தயவாய் எம்மை தொடர்பு கொள்ளவும். இதன் மூலமாய் வரும் ஆசீர்வாதங்கள் தங்களது வாழ்வையும், சபைகளையும் நிரப்புவதாக

கடிதத் தொடர்புகளுக்கு: ஆசிரியர்,
" வாலிபன் " சஞ்சிகை,
மெதடிஸ்த ஆலயம், கோட்டைமுனை,
மட்டக்களப்பு, இலங்கை.

வாலிபன்
VAALIPAN
வாலிபர்களுக்கான மாதாந்த சஞ்சிகை

VAALIPAN MINISTRIES SRI LANKA

vaalipankyf@gmail.com
http://www.vaalipan.com/
/VAALIPAN/ /Vaalipan_kyf

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணசிங்கா பிறிண்டேர்ஸ், திருமலை வீதி, மட்டக்களப்பு. 065 222 7170